1972 மார்ச் 17]

வசதி வாரியத் தலைவரிடமிருந்து கேட்கப்பட்டது. அந்தத் தலைவர் அவர்கள் 24 இடங்களை தமிழ்நாட்டிலே தேர்ந்தெடுத்து திட்டத்தை அனுப்பியிருக்கிறார்கள். அந்த 24 இடங்களில் பெரம்பலூர் ஒரு இடமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூடலூருக்கு அறுவை மில்

* 543 வினா.—திரு. கு. அ. பொம்மன் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் கூடலூரில் மரம் அறுவை மில் (Saw Mill) ஒன்று தொடங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

திரு. எம். தேவராசன் : தலைவர் அவர்களே, கூடலூரிலே ஏராளமாக மரம் கிடைக்கிறது. அந்த மரங்களையெல்லாம் கள்ளிக்கோட்டைக்குக் கொண்டு சென்றுதான் அறுவை செய்கிறார்கள். எனவே, கூடலூரிலேயே ஒரு மர அறுவை மில் ஏற்படுத்துவதன்மூலம் வேலைவாய்ப்புக் கொடுக்கலாம், நல்ல லாபம் கிடைக்கும். எனவே அதை ஏற்படுத்த அரசு யோசிக்குமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அரசுத் துறை மூலமாக அறுவை மில் வைக்கப்படவில்லை. ஆங்காங்கு தனியார்கள் வைத்திருக்கிறார்கள். தனியார் துறையில் வைக்க யாராவது முன்வந்தால் அதற்கு உதவி செய்வதுபற்றி கவனிக்கப்படும்.

கரடிகுளத்திலுள்ள வனத்துறை நிலங்கள்

* 544 வினா.—திரு. எம். முத்தையா : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி தாலுக்காவைச் சார்ந்த கரடிகுளம் வன இலாகாவில் 1,000 ஏக்கர் நிலங்கள் ரொம்பவும் பயனற்று இருப்பதால் அந்த நிலங்களை ஏழைகளுக்குப் பங்கிட்டுக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : கோவில்பட்டி தாலுக்காவைச் சார்ந்த கரடிகுளம் காட்டுப் பகுதியின் மொத்தப் பரப்பு 1,229.03 ஏக்கர். இதில் சுமார் 725 ஏக்கர் நிலத்தை, இலங்கையிலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்களின் மறுவாழ்வுக்காக, வருவாய்த் துறைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மீதியுள்ள